இணைப்பு.

(159 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா 164—எண் 9805-க்கான விடையைக் காண்க.)

தமிழ்நாட்டிலுள்ள தென்னகக் கட்டிடத் தொழிலாளர் சங்கம், தமிழகக் கட்டிடத் தொழிலாளர் மத்திய சங்கம் மற்றும் இவற்றின் பலதரப்பட்ட கிளைச் சங்கங்கள் தங்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றச் கோரி அரசுக்கு மார்ச் 1981 முதல் மனுக்களை அனுப்பின. அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சில முக்கியமான கோரிக்கைகள் பின்வருமாறு :—

1. கட்டிடத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருதல்.

2. விபத்தில் இறந்தால் நிவாரண நிதியாக ரூ. 10,000 கொடுத்தல்.

3. ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்.

4. கூலி நிர்ணயக் குழு அமைத்தல்.

5. சிமெண்ட் பர்மிட் முறையை மாற்றி அமைத்தல்.

6. வீட்டு மனைப்பட்டா வழங்குதல்.

7. இரும்பு, மரம், செங்கல் இவைகளின் விலைகளைக் கட்டுப்படுத்துதல்.

8. அரசு வழங்கும் கடன் தொகைகளை கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தல்.

9. இலவசத் தொழிற் கருவிகள் வழங்குதல்.

10. பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றம் இவற்றில் பிரதிநிதித்துவம் கொடுத்தல்.

11. குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடியிருப்பு வழங்கல்.

12. கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்னுரிமை கொடுத்தல்.

13. அரசு கட்டும் கட்டிடக் கட்டுமான வேலைகளை முன் பணமின்றி கட்டிடத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தல்.

14. கட்டிடத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இலசெ கல்வி வசதியை வழங்குதல்.

மேற்கண்ட கோரிக்கைகளில் முதல் நான்கு கோரிக்கைகள் இத்துறையைச் சார்ந்தவையாகும். இவை குறித்து எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:—

1. கட்டிடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருதல்.

கட்டிடக் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் நலன் கருதி மாநில அளவில் ஒரு சட்டம் இயற்ற இவ்வரசு உத் தேசித்து, அதற்கான ஒரு சட்ட முன் வடிவும் தயாரித்து அதற்கு மத்திய அரசின் ஒப்புதலையும் பெற்றுள்ளது. இச்சட்டம் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிமுகம் செய்யப்பட் டுள்ளது.

2. விபத்தில் இறந்தால் நிவாரண நிதியாக ரூ. 10,000 கொடுத்தல்.

1923 ஆம் ஆண்டின் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தில் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர் வேலை செய்து கொண் டிருக்கும்போது காயமுற்றால்/இறந்தால், அவருக்கு / அவர்தம் குடும்பத்தினருக்குத் தகுந்த இழப்பீடு வழங்க ஏற்கெனவே விதி முறைகள் உள்ளன. கட்டிட கட்டுமானத் தொழிலாளர்கள் நலன் கருதி இயற்ற உத்தேசித்திருக்கும் தனிச் சட்டத்திலும் இவ் விதிமுறைகள் பொருந்துமாறு வழிவகை செய்யப்பட்டுள்ளன. மேலும் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின் போது மேதகு ஆளுநர் ஆற்றிய உரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள் ளது.—

"1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடக் கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வகை விதிகள்) சட்ட முன்வடிவிற்கு அரசு கொண்டு வரவிருக்கும் அதிகாரப் பூர்வமான திருத்தத்தின் படி கட்டிடக் கட்டுமானப் பணியாட்களை வேலை யில் வைத்திருப்பவர்கள் வேலையின் போது அவர்களின் ஆயுளுக் கும் மற்ற அங்க இழப்புக்களுக்கும் போதுமான காப்புறுதி வசதி ஏற்படுத்த வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படும். இத் திருத்தத்தினால் பயன் பெறாதவர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 10,000 அளிக்க முடிவு செய்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் பயன் பெறக் கட்டிடப் பணியாளர்கள் ரூ. 5 கொடுத்து தங்களைத் தொழி லாளர் நலத் துறையில் பதிவு செய்துக் கொள்ள வேண்டும்".

984 மார்ச் 5]

3. ஈ. எஸ். ஐ. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்:

1948 ஆம் ஆண்டின் தொழிலாளர் மாநில ஈட்டுறுதிச் சட்டத்தின் விதிமுறைகளைக் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் பொருந்துமாறு அரசு இயற்ற உத்தேசித்திருக்கும் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4. கூலி நிர்ணயக் குழு அமைத்தல்.

1948 ஆம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் கட்டிடத் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த குறைந்த பட்ச ஊதியத்தை மாற்றி அமைப்பதற்கென அரசு ஓர் ஆலோசனைக் குழுவை 1981 ஆம் ஆண்டு அமைத்தது. அக்குழுவின் அறிக்கையில் கண்ட பரிந்துரைகளை அரசு பரிசிலித்து, கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதிய வீதங்களை திருத்தியமைத்து கடந்த ஆண்டு ஜூலைத் திங்களில் ஆணை வெளியிட்டு உள்ளது.

கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்களின் மற்ற கோரிக்கைகள்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி அவற்றின் நகல்கள் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
3 - JAN 1985
MADRAS-600 009